**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.12/2024 - PW- 22**

| | |
|---|---|
| Name | திரு. கே.ஆர்.அருள் |
| Husband/Father Name | இராமசாமி |
| Village /Area | உடுமலைப்பேட்டை |
| Taluk | உடுமலைப்பேட்டை |
| Occupation | காவல் ஆய்வாளர் |
| Age | 54 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 13.10.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2015ம் ஆண்டு நான் அரக்கோணம் நகர காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது அரக்கோணம் காவல் நிலைய குற்ற எண். 180/2015 சட்ட பிரிவு 302, 380 இதச வழக்கினை நான் தொடர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டும் சாட்சிகள் 1 முதல் 20 வரை உள்ள நபர்களை விசாரணை செய்த போது ஏற்கனவே எனக்கு முன்பாக விசாரித்த ஆய்வாளரிடம் அளித்த வாக்குமூலத்தையே என்னிடமும் அளித்ததால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

23.06.2015 அன்று இவ்வழக்கில் இறந்து போன கோமதியம்மாள் பிரேதத்தின் மீது உடல் கூறாய்வு செய்த மருத்துவர் திரு.சங்கர் அவர்களை விசாரணை செய்து பிரேத அறிக்கை பெற்று அவரை விசாரித்து வாக்குமூலும் பதிவு செய்தேன். மேலும், 2331

காவலர் ராஜ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் வழக்கு குறித்து அரசு மாவட்ட குற்றவியல் துணை இயக்குநர் அவர்களின் கருத்துரை பெற்று சட்ட பிரிவுகளை இதச சட்டம் 302, 380 பிரிவிலிருந்து 449, 392, 302 இதச வாக பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்து சட்ட பிரிவுகளை மாற்றி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த பிரிவு மாற்று அறிக்கை **அதசாஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகறிது.

எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.13 17:18:06 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.